13.03.2026.

OS.643/2011

DW1- கருப்பசாமி – த/பெ.சுப்பையா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.03.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> (வாதி தரப்பில்)

1. நான் வாதிகள், பிரதிவாதிகள் ஒரே ஊர் என்றால் சரியல்ல.

2. நான் 1973 ம் வருடம் பிறந்தேன் என்றால் சரிதான்.

3. தபசில் சொத்து 2011 வருடத்திற்கு முன்பு யார் பெயரில் இருந்தது என்பதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.3 ஆவணத்தில் பெருமாள்பகடை மகன் பெருமாள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.3 ல் உள்ள கையொப்பம் 1973 ம் வருடம் இடப்பட்டது என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.3 ல் மாடசாமி பெயர் இல்லை என்றால் சரிதான்.

7. 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரை விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

8. 1 முதல் 3 பிரதிவாதிகள் அவர்களது எதிர்வழக்குரையில் தபசில் சொத்தானது ஆதியில் மாடசாமி நாடார் என்பவருக்கு பூர்விகமாக பாத்தியமானது என்றும் பட்டா எண்.1095 வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. நான் மாடசாமி நாடார் வாரிசுகளிடம் தான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

10. வாதிகளின் முன்னோர் சங்கன்பகடை மற்றும் பெருமாள் பகடையை தெரியுமா என்றால் தெரியாது.

11. பி.வா.சா.ஆ.5 மற்றும் 6 ஆகிய ஆவணங்களில் பெருமாள் பகடை மகன் பெருமாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. வாதிகளின் குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல என் அத்தை சொல்லி தெரியும்.

13. நான் தாக்கல் செய்த மனுவில் தபசில் சொத்தானது பெருமாள்பகடை மகன் பெருமாளுக்கு ஒதுக்கப்பட்டதாக ஒப்புக்கொள்கிறேன் என்றால் சரிதான்.

14. தபசில் சொத்தின் பட்டா பெருமாள்பகடைக்கு பட்டா எண்.503 ன் படி ஒதுக்கப்பட்டதை நான் ஒப்புக்கொள்கிறேன் என்றால் சரிதான்.

15. பெருமாள்பகடை மாடசாமிக்கு 1965ம் ஆண்டு ரூ.80/-க்கு தபசில் சொத்தை வாய்மொழி கிரையம் கொடுத்ததாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

16. 1965ம் வருடத்தில் இருந்து மாடசாமி தபசில் சொத்தை அனுபவித்து வந்தால் அவர் பெயரில் தனி பட்டா வந்திருக்கும் என்றும் அவர் அனுபவம் செய்யாததால் வாதிகளின் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல.

17. மாடசாமியின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

18. பி.வா.சா.ஆ.5 ல் மாடசாமி நாடார் பெயர் எவ்வாறு சேர்க்கப்பட்டது என்பது குறித்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அனுபவத்தில் வந்தது.

19. மாடசாமி நாடார் செலுத்தியதாக தீர்வை எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

20. வருவாய்துறை அதிகாரிகளை விசாரித்தால் மாடசாமி அனுபவத்தில் இருந்தாரா என்றும் மாடசாமி பெயர் பட்டாவில் எவ்வாறு ஏற்பட்டது என்ற விவரம் தெரியும் என்பதால் வருவாய் துறை அதிகாரிகளை வாதி விசாரிக்க எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது.

21. பி.வா.சா.ஆ.29 ஆவணத்தில் மாடசாமி பெருமாள்பகடைக்கு விற்ற விவரம் துலங்கும் என்றால் சரிதான்.

22. நான் வீடு கட்டும்போது வாதிகள் மின்சார வாரியத்திலும், பஞ்சாயத்து அலுவலகத்திலும் தடங்கல் மனு அளித்தார்கள் என்றால் சரியல்ல.

23. நான் உரிமை இல்லாத நபர்களிடம் கிரையம் பெற்றதால் என் கிரையம் செல்லத்தக்கதல்ல என்றும் அந்த கிரையத்தின் அடிப்படையில் நான் பட்டா மாற்றம் செய்ததும் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்பதால் என் கட்சி நிராகரிக்கப்பட்டு வாதிகளின் வழக்கு அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

24. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்பதால் மேற்படி ஆவணங்கள் ஏற்கத்தக்கதல்ல என்றும் எனவே வாதிகளின் வழக்கு அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

ஒம்/-J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
தென்காசி